ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/56 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06

*2261/56 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 3/2013*

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கம்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோகித்த அபேகுணவர்த்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில்,
*அமைச்சர்.*

*2021, திசெம்பர் 29,*
கொழும்பு.

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்லுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் VII லுக்கும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்துக்கும், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

1A - G 35895 — 510 (2022/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I
## இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையதாந்தன்மை

*1. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், பின்வருவனவற்றை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-*

*(அ) பொதியிடப்பட்ட வடிவத்தில் அபாயகரமான பண்டங்கள்;*

*(ஆ) தொகையான திண்ம வடிவத்திலான அபாயகரமான பண்டங்கள்;*

*(இ) தொகையான அபாயகரமான திரவ இரசாயனப் பொருட்கள்; அத்துடன்*

*(ஈ) தொகையான திரவமாக்கப்பட்ட வாயுக்கள்.*

*(2) இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையனவும் அவை எங்கேனும் இருக்கக்கூடியனவுமான கப்பல்களுக்கும், வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(3) (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் அவ்வாறு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது விடயங்களின் வகுப்புகளுக்காக அல்லது தனிப்பட்ட விடயங்களுக்காக விலக்களிப்புச் சான்றிதழில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக இவ்வொழுங்குவிதிகளின் எல்லா ஏற்பாடுகளிலிருந்தும் அல்லது அவற்றுள் எவற்றிலிருந்தும் விலக்களிப்புகளை வழங்கலாமென்பதுடன் நியாயமான அறிவித்தல் கொடுக்கப்படுவதற்கமைய, அத்தகைய ஏதேனும் விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.*

*(2) (அ) 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந்தேதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பலொன்றுக்கு விலக்களிப்பு வழங்கப்படுமிடத்து, அது அவ்வொழுங்குவிதிக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.*

*(ஆ) 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந் தேதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவிராத கப்பலொன்றுக்கு இவ்வொழுங்கு விதியின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்திலிருத்தல் வேண்டும்.*

## பாகம் II
## அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்லுதல்

*4. (1) நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்ததாக இருக்குமளவுக்கு, அபாயகரமான பண்டங்கள் கப்பலில் கையாளப்படும்போது, அடுக்கிவைக்கப்படும்போது அல்லது ஏற்றிச்செல்லப்படும்போது, விடயத்துக்கேற்ப, அப்பண்டங்கள் கையாளப்படும், அடுக்கிவைக்கப்படும் அல்லது ஏற்றிச்செல்லப்படும் முறையிலுள்ளதெதுவும் எவரேனுமாளின் உடனலத்துக்கும் காப்புக்கும் குறிப்பிடத்தக்க ஆபத்தை உருவாக்கக்கூடிய அத்தகையதாக விராதவகையிலானதாக இருப்பதனை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு தொழிற்படுத்துநரினதும், கப்பலிலுள்ள ஆட்களின் ஒவ்வொரு தொழில்தருநரினதும், கப்பலின் ஒவ்வொரு கப்பற்றலைவரினதும் கடமையாதல்வேண்டும். அபாயகரமான பண்டங்களின் அத்தகைய கையாளுகை, ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளின் தோதான ஏற்பாடுகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.*

*(2) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் தொழிற்படுத்துநரின், தொழில்தருநரின் அல்லது கப்பற்றலைவரின் கடமையின் பொதுமைக்குப் பங்கமின்றி, தொழிற்படுத்துநரினதும் தொழில்தருநரிநதும் கடமை எக்கருமங்களுக்கு நீடிக்கின்றதோ அக்கருமங்கள் குறிப்பாகப் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-*

(அ) அபாயகரமான பண்டங்களைக் கையாளுதல், அடுக்கிவைத்தல் மற்றும் ஏற்றிச்செல்லுதலுக்காகக் கப்பலின் கட்டமைப்பை, பொருத்திகளை மற்றும் சாதனங்களை வழங்குதலும் பேனுதலும்.

(ஆ) கப்பலில் அபாயகரமான பண்டங்களைக் கையாளுதல், அடுக்கிவைத்தல் மற்றும் ஏற்றிச்செல்லுதல் சம்பந்தமாக எல்லா ஊழியர்களுக்கும் அத்தகைய தகவலை, அறிவுறுத்துதலை, பயிற்சியை மற்றும் மேற்பார்வையை வழங்குதல்.

4. பொதியிடப்பட்ட வடிவத்தில் அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்லுதல், சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையின் இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

6. (1) அபாயகரமான பண்டங்கள் பற்றிய ஒரு வெளிப்படுத்துகை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகள் பற்றிய ஒரு வெளிப்படுத்துகை, அல்லது இணைந்த அபாயகரமான பண்டங்கள் மற்றும் கடல்சார் தீழ்ப்பாக்கிகள் பற்றிய வெளிப்படுத்துகை, தோதானவாறு கப்பற்றலைவருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு வழங்கப்பட்டிருந்தாலொழிய, பொதியிடப்பட்ட பண்டங்கள் எவையும் ஏதேனும் கப்பலில் ஏற்றிச்செல்கைக்காக முனையப்படுதலோ அல்லது கப்பலில் எடுக்கப்படுதலோ ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வெளிப்படுத்துகை, ஆவணம் தயாரிக்கப்பட்ட தேதியையும் கையொப்பமிடுநரின் பெயரையும், அந்தஸ்தையும், கம்பெனியையும் அல்லது ஒழுங்கமைப்பையும் செம்மையானமுறையில் அடையாளங்காணல் வேண்டும்.

(3) பொதியிடப்பட்ட பண்டங்கள் எவையும், 7 ஆம் ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) இற்குப் பங்கமின்றி உட்பட கப்பற்றலைவருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு ஆவணமொன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் கப்பலில் ஏற்றிச்செல்கைக்காக முனையப்படுதலோ அல்லது எடுக்கப்படுதலோ ஆகாது.

(4) அத்தகைய ஆவணம் பின்வரும் விபரங்களை உள்ளடக்குகின்றது:-

(அ தகுந்த கப்பலேற்றற் பெயர்
(ஆ) ஏற்புடையற்பாலவிடத்து வகுப்பும் பிரிவும்
(இ) சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையினால் குறித்தொதுக்கப்பட்டவிடத்து ஐக்கிய நாடுகள் சபை (ஐநாச) இலக்கங்கள்
(ஈ) இயைபானவிடத்து பொதியிடப்படுகின்ற அல்லது பொதிகட்டுகின்ற தொகுதி
(உ) பொதிகளின் எண்ணிக்கையும் வகையும்
(ஊ) அபாயகரமான பண்டங்களின் மொத்தத் தொகை அல்லது உள்ளீடுகளின் தேறிய வெடிக்கத்தகு திரண்மம்
(எ) தோதானவிடத்து கடல்சார் தீழ்ப்பாக்கி என்ற சொற்கள் அத்துடன் (ஏ). சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையினால் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் தகவல்.

(5) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வெளிப்படுத்துகை, இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (3) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(6) கப்பலேற்றுநர் பண்டங்களை நேரடியாகக் கப்பலுக்கு அல்லது அதன் முகவருக்கு ஒப்படைக்குமிடத்து, அத்தகைய கப்பலேற்றுநர் இவ்வொழுங்குவிதியின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையையும் ஆவணங்களையும் தொழிற்படுத்துநரிடம் அல்லது கப்பற்றலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(7) கடலில் ஏற்றிச்செல்வதற்காகப் பண்டங்களை அனுப்புகையில், கப்பலேற்றுநர், கப்பலுக்கு அல்லது அதன் முகவருக்கு இவ்வொழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையினதும் ஆவணத்தினதும் முன்னோக்கிய ஒப்படைப்பை உறுதிப்படுத்துவதற்குத் தகுந்த ஏற்பாட்டைச் செய்தல் வேண்டும்.

(8) பண்டங்களானவை கப்பலேற்றுநரினால் கப்பலுக்கு அல்லது முகவருக்கு ஒப்படைக்கப்படாத விடயத்தில், ஆனால் பண்டங்களின் முன்னோக்கிய ஒப்படைப்புக்காக அல்லது நிகழ்தகு ஒப்படைப்புக்காகப் பண்டங்களை வேறு பண்டங்களுடனும் அல்லது சரக்குகளுடனும் ஒன்றுதிரட்டுவதற்காக இன்னோராளுக்கு அவை வழங்கப்படும் விடயத்தில், ஆவணத்தையும் வெளிப்படுத்துகையையும் வழங்குவதற்கான பொறுப்பு, அனுப்புநரையும் இவ்வொழுங்குவிதியின் (5) ஆம், (6) ஆம்

உபஒழுங்குவிதிகளில் கப்பலேற்றுநருக்காக அது செய்கின்றமை போன்று முன்னோக்கிய கைமாற்றத்துக்காகவும் ஒப்படைப்புக்காகவும் பொறுப்பாகவுள்ள ஒவ்வோராளையும் சார்ந்ததாதல் வேண்டும். வெளிப்படுத்துகையையும் ஆவணத்தையும் வழங்குவதற்கான பொறுப்பு, கப்பலின்மீது பண்டங்களைச் சுமையேற்றுவதில் அல்லது துறைமுகம் அல்லது முடிவிடத்தைச் சுற்றிப் பண்டங்களை இடம்பெயர்ப்பதில் மட்டுமே ஈடுபட்டுள்ள அவ்வாட்களுக்கு நீடித்தலாகாது.

(9) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (8) இன் தேவைப்பாடுகள், 7 ஆம், 8 ஆம் ஒழுங்குவிதிகளில் அடங்கியுள்ள கப்பலேற்றுநரின் கடமைகளுக்குப் பங்கமின்றியிருத்தல் வேண்டும்.

(10) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (8) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு கப்பலேற்றுநர், அனுப்புநர் அல்லது வேறு ஆள்-

(அ) இவ்வொழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வெளிப் படுத்துகையையும் ஆவணத்தையும் கப்பலின் தொழிற்படுத்துநருக்கு அல்லது கப்பற்றலைவருக்கு வழங்கத்தவறுமிடத்து அல்லது

(ஆ) பொய்யானதென அவர் அறிந்துள்ள ஒரு வெளிப்படுத்துகையையும் ஆவணத்தையும் வழங்குமிடத்து அல்லது முக்கியமானவொரு விபரத்தில் பொய்யானதாகவுள்ள ஒரு வெளிப்படுத்துகையைக் கவலையீனமாகச் செய்யுமிடத்து,

அவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(11) ஒரு வெளிப்படுத்துகையும் ஆவணமுமின்றி எவையேனும் பொதியிடப்பட்ட பண்டங்களை ஏற்றிச்செல்கைக்காக ஏற்றுக்கொள்ளும் அல்லது கப்பலில் எடுக்கும் அல்லது பெறும் தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

7. (1) பின்வருமாறு இருந்தாலொழிய, கப்பலேற்றுநர் ஏற்றிச்செல்கைக்காகப் பொதியிடப்பட்ட பண்டங்களை முனைதலாகாது:-

(அ) சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளும் தோதானவாறு, துறைமுக அரச அதிகாரியினால் அல்லது அனுப்புநரினால் பெயர்குறிக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கு அவற்றின் வெளிப்படுத்துகை, வகுப்பாக்கம், குறியிடுதல், பொதியிடுதல், சுட்டுத்துண்டிடுதல், ஒட்டுவிளம்பரப்படுத்தல் மற்றும் முன்னறிவித்தல் தொடர்பாக இணங்கியொழுகப்பட்டிருந்தாலொழியவும் அத்துடன்

(ஆ) ஒரு காவத்தக்க தாங்கியில் அல்லது தாங்கிக் கொள்கலத்தில் அல்லது வாகனத்திலுள்ள பண்டங்களின் விடயத்தில், சர்வதேசக் கடலோர: அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்க ஏற்புடையற்பாலனவான தாங்கித் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன்மூலம் கடலில் ஏற்றிச்செல்லப்படுவதற்காகப் பண்டங்கள் தகுந்த முறையிலும் காப்பாகவும் ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்தாலொழியவும்.

(2) கப்பலேற்றுவதற்காக எவையேனும் பண்டங்களை ஆயத்தஞ்செய்வதில், இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இடம்பெயர்த்தலுக்காகத் தகுந்த முற்காப்புகளும் ஆயத்தங்களும் செய்யமுடியுமானவையாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கென அபாயகரமான பண்டங்களை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளை அடையாளங்காண்பதும் வகுப்பாக்கம் செய்வதும் கப்பலேற்றுநரின் கடமையாதல் வேண்டும்.

(3) மேலே 6 ஆம் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையெதுவும், இவ்வொழுங்குவிதியின் உபடஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) இணங்கியொழுகப் பட்டிருந்தாலொழிய, கப்பலேற்றுநரினால் கையொப்பமிடப்படுதலாகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதிகள் (1) முதல் (3) வரையிலானவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற கப்பலேற்றுநரொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) பண்டங்கள் உபஒழுங்குவிதி (1) நிற்கிணங்கியொழுகவில்லையெனச் சந்தேகிப்பதற்குத் தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவருக்கு நியாயமான காரணமிருக்குமிடத்து, அவர், பொதியிடப்பட்ட எவையேனும் பண்டங்களை ஏற்றிச்செல்கைக்காக ஏற்றுக்கொள்ளுதலாகாது, அல்லது கப்பலில் எடுத்தலோ அல்லது பெறுதலோ ஆகாது. இப்பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

8. (1) பொதியிடப்பட்ட பண்டங்கள் ஒரு சரக்கு இடப்பெயர்வுக் கூறில் அல்லது அதன்மீது பொதியிடப்படவுள்ளவிடத்து அல்லது கப்பலேற்றப்படவுள்ளவிடத்து, அதன்கண் அத்தகைய பண்டங்களைப் பொதியிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் -

(அ) பண்டங்களின் அடுக்குகை, தனிப்படுத்துகை மற்றும் பாதுகாப்பு போதியதாகவும் சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்கவும் உள்ளதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் அத்துடன்

(ஆ) சரக்கு இடப்பெயர்வுக் கூறு, அடையாளங்காணல் இலக்கம் அல்லது இலக்கங்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டியும், தொழிற்பாட்டின் இடமும் தேதியும், பொதியிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் பெயரும், அவரது அந்தஸ்தும், கம்பெனியும் என்பவற்றை அடையாளங்கண்டும், சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கிணங்க, கையொப்பமிடப்பட்ட பொதியிடற் சான்றிதழொன்றைத் தொழிற்படுத்துநருக்கு அல்லது கப்பற்றலைவருக்கு அல்லது கப்பலேற்றுநருக்கு அல்லது அனுப்புநருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஒரு காவத்தக்க தாங்கியினுள், வீதித் தாங்கி வாகனத்தினுள், தண்டவாளத் தாங்கிச் சுமைவண்டியினுள் அல்லது தாங்கிக் கொள்கலத்தினுள் பொதியிடப்பட்ட பண்டங்கள் தொடர்பாக இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகமாட்டாது.

(3) (அ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இன் ஏற்பாடுகளை மீறுகின்றவரும் அத்தகைய பண்டங்களைப் பொதியிடுவதற்குப் பொறுப்பாகவுள்ளவருமான ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(ஆ) கையொப்பமிடப்பட்ட பொதியிடற் சான்றிதழைக் கப்பலின் தொழிற்படுத்துநருக்கு அல்லது கப்பற்றலைவருக்கு வழங்கத்தவறுகின்ற கப்பலேற்றுநர் அல்லது அனுப்புநர் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) தொழிற்படுத்துநர் ஒருவர் அல்லது கப்பற்றலைவர், கையொப்பமிடப்பட்ட பொதியிடற் சான்றிதழின்றி ஏதேனும் சரக்கு இடப்பெயர்வுக்கூறை, அதிலான அத்தகைய பண்டங்களுடன் ஏதேனும் கப்பலில் ஏற்றுக்கொள்ளுதலாகாது. இப்பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற தொழிற்படுத்துநர் ஒருவர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

9. ஒழுங்குவிதிகள் 6 மற்றும் 8 இனால் தேவைப்படுத்தப்பட்ட ஓர் அபாயகரமான பண்டங்கள் பற்றிய வெளிப்படுத்துகை, கடல்சார் தீழ்ப்பாக்கி பற்றிய வெளிப்படுத்துகை மற்றும் 6 ஆம், 8 ஆம் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் சேர்த்தனுப்பப்படும் ஆவணம், ஒரு பத்திர ஆவணம் என்ற வடிவத்தில் அல்லது இலத்திரனியல் தரவுச் செய்முறைப்படுத்தல் அல்லது இலத்திரனியல் தரவு இடைமாற்று முறைகள்மூலம் கப்பற்றலைவருக்கு அல்லது 'தொழிற்படுத்துநருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. (1) பொதியிடப்பட்ட பண்டங்களை ஏற்றிச்செல்கின்ற ஏதேனும் கப்பலின் தலைவர், பின்வருவனவற்றைச் செய்கின்ற விசேட நிரல், சரக்குப்பட்டியல் அல்லது. அடுக்குகைத்திட்டம் கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்:-

(அ) பண்டங்களின் சரியான 'தொழினுட்பப் பெயர், சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்க அவற்றின் வகுப்பாக்கம் மற்றும் அவற்றின் திரண்மம் அல்லது அளவுப்பட, கப்பலிலுள்ள பொதியிடப்பட்ட பண்டங்கள்பற்றிக் கப்பலேற்றுநரினால் சமர்ப்பிக்கப்பட்ட கப்பலேற்றுதல் ஆவணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களைத் தருகின்றதும் அத்துடன்

(ஆ) பண்டங்கள் கப்பலில் அடுக்கிவைக்கப்படுகின்ற இடத்தின் விபரங்களைக் காட்டுகின்றதும்.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இனால் தேவைப்படுத்தப்பட்ட தகவல், பொதியிடப்பட்ட அபாயகரமான பண்டங்கள் மற்றும் பொதியிடப்பட்ட கடல்சார் தீழ்ப்பாக்கிகள் ஆகிய இரண்டும் தொடர்பானவையை ஓர் இணைந்த நிரலில், சரக்குப்பட்டியலில் அல்லது அடுக்கிவைத்தல் திட்டத்தில் கொண்டிருக்கலாம், அல்லது ஒன்று அபாயகரமான பண்டங்கள் தொடர்பானவையும் மற்றையது கடல்சார் தீழ்ப்பாக்கிகள் தொடர்பானவையுமாக அத்தகைய இரண்டு நிரல்களில், சரக்குப்பட்டியல்களில் அல்லது அடுக்கிவைத்தல் திட்டங்களில் கொண்டிருக்கலாம். ஓர் இணைந்த ஆவணம் பயன்படுத்தப்படும்போது, எவை அபாயகரமான பண்டங்களென்றும் எவை கடல்சார் தீழ்ப்பாக்கிகளென்றும் அது தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(3) பொதியிடப்பட்ட அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்வதற்காகச் சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையினால் தேவைப்படுத்தப்படுமிடத்து கப்பற்றலைவர் எவையேனும் மேலதிக விசேட ஆவணங்களையும் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் நிரலும், சரக்குப்பட்டியலும் அல்லது அடுக்குகைத் திட்டமும் மற்றும் இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (3) றைப் பின்பற்றிக் கப்பலில் ஏற்றிச்செல்வதற்காகப் பண்டங்களை ஏற்றுக்கொள்வதற்காகத் தேவைப்பட்ட எவையேனும் மேலதிக விசேட ஆவணங்களும், பண்டங்கள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டுள்ளவரையும் குறிப்பீட்டுக்காக அல்லது. சோதனைக்காகக் கப்பலில். கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(5) பொதியிடப்பட்ட பண்டங்களை ஏற்றிச்செல்கின்றவரும் (4) ஆம் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒரு நிரல், சரக்குப்பட்டியல் அல்லது அடுக்குகைத்திட்டம் அல்லது மேலதிக விசேட ஆவணங்கள் கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனை அல்லது. கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுவதனைச் செய்விப்பதற்குத் தவறுகின்றவருமான ஒரு கப்பலின் கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

11. (1) தோதானவாறும் சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டவாறும், பொதியிடப்பட்ட பண்டங்கள் குறியிடப்பட்டு, சுட்டுத்துண்டிடப்பட்டு, ஓட்டுவிளம்பரப்படுத்தப்பட்டாலொழியவும் தூமமூட்டல் எச்சரிக்கைச் சைகையொன்றை வெளிக்காட்டினாலொழியவும், பொதியிடப்பட்ட பண்டங்கள் ஏதேனும் கப்பலில் ஏற்றிச்செல்லப்படுவதற்காக அக்கப்பலின்மீது எடுத்துச்செல்லப்படுதலாகாது.

(2) பொதியிடப்பட்ட பண்டங்களைக் குறியிடுதல், அவற்றில் சுட்டுத்துண்டிடுதல் அல்லது அவற்றை ஒட்டுவிளம்பரப்படுத்தல் தொடர்பாக இவ்வொழுங்குவிதியின் உபடஒழுங்குவிதி (1) றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் கப்பலேற்றுநர் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) ஓராம் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, குறியிடப்படாதுள்ள, சுட்டுத்துண்டிடப்படாதுள்ள அல்லது ஒட்டுவிளம்பரப்படுத்தப்படாதுள்ள அல்லது தூமமாக்கல் எச்சரிக்கைச் சைகையை வெளிக்காட்டாதுள்ள் ஏதேனும் பொதியில் கப்பலினமீது அபாயகரமான பண்டங்களை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளை ஏற்றுக்கொள்கின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

12. (1) கப்பலில் பொதியிடப்பட்ட பண்டங்களின் அடுக்குகை சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையினால் தடைசெய்யப்பட்டிருப்பின் அவை கப்பலில் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

(2) சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்க எவையேனும் அவசியமான மேலதிகக் காப்புச் சாதனங்கள் வழங்கப்பட்டாலொழிய, பொதியிடப்பட்ட பண்டங்கள் கப்பலில் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

(3) சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்கப் பொதியிடப்பட்ட பண்டங்கள் கப்பலில் போதிய முறையில் அடுக்கிவைக்கப்பட்டு, தனிப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) அல்லது (2) இற்கு முரணாகப் பொதியிடப்பட்ட பண்டங்களைக் கப்பலில் ஏற்றுக்கொள்கின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) இவ்வொழுங்குவிதியின் உபடஒழுங்குவிதி 3 றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப். புரிகின்றார்.

13. (1) கலனானது 14 ஆம் ஒழுங்குவிதியைப் பின்பற்றிச் சரக்குப் பாதுகாப்புக் கைந்நூலொன்றைக் கொண்டுசெல்லுமிடத்து, கொள்கலன்களுட்பட, சரக்கு இடப்பெயர்வுக் கூறுகள் ஏதேனும் கடற்பயணம் பூராகவும் கைந்நூலுக்கிணங்கச் சுமையேற்றப்படுதலும், அடுக்கிவைக்கப்படுதலும், பாதுகாக்கப்படுதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) றுக்கிணங்கியொழுகத்தவறுகின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

14. (1) சரக்கும், சரக்குக் கூறுகளும், சரக்கு இடப்பெயர்வுக் கூறுகளும், கடற்பயணம் பூராகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சரக்குப் பாதுகாப்புக் கைந்நூலுக்கிணங்கச் சுமையேற்றப்படுதலும், அடுக்கிவைக்கப்படுதலும், பாதுகாக் கப்படுதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இன் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் ஒழுங்கமைப்பை ஏற்றங்கீகரித்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சரக்குப் பாதுகாப்புக் கைந்நூல், ஆகக்குறைந்தது ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட இயைபான வழிகாட்டுநெறிகளுக்குச் சமமான தரம்வரையேனும் வரையப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆங்கில மொழியில் இருத்தலும் வேண்டும்

(4) இவ்வொழுங்குவிதியின் உபடமுங்குவிதி (1) றுக்கிணங்கியொழுகத்தவறுகின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

15. (1) கப்பலில் ஏற்றிச்செல்லப்படும் அத்தகைய பொதியிடப்பட்ட பண்டங்களை உட்படுத்துகின்ற ஓர் அவசரகாலநிலைமையில் எடுக்கப்படவேண்டிய அத்தியாவசிய நடவடிக்கைகள்பற்றி எல்லா ஊழியர்களும் பரிச்சயமாகவிருப்பதனைத் தொழிற்படுத்துநரும் கப்பற்றலைவரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றுக்கிணங்கியொழுகத்தவறுகின்ற ஒரு தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

### பாகம் III

### அபாயகரமான பண்டங்களை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளைத் தொகையாக ஏற்றிச்செல்லுதல்

16. அபாயகரமான பண்டங்கள் அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகள் ஏதேனும் கப்பலில் காப்பாகக் கையாளக்கூடியனவல்ல அல்லது ஏற்றிச்செல்லக்கூடியனவல்ல என நம்புவதற்குத் தொழிற்படுத்துநருக்கு ஏதேனும் காரணமிருப்பின் அவை அவ்வாறு கையாளப்படுதலாகாது அல்லது தொகையாக ஏற்றிச்செல்லப்படுதலாகாது.

17. (1) அபாயகரமான பண்டங்களைத் திண்ம வடிவத்தில் தொகையாக ஏற்றிச்செல்லுதலானது, சர்வதேசக் கடலோரத் தொகையான திண்மச் சரக்குகள் சட்டக்கோவையின் இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகவிருத்தல் வேண்டும்.

(2) தொகையாகத் திண்ம வடிவத்திலான அபாயகரமான பண்டங்கள், பண்டங்களின் தன்மைக்கிணங்கக் காப்பாகவும் தோதானமுறையிலும் சுமையேற்றப்படுதலும் அடுக்கிவைக்கப்படுதலும் வேண்டும். ஒவ்வாதனவாகவுள்ள பண்டங்கள் ஒன்றிலிருந்தொன்று தனிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) திடீரான வெப்பமூட்டுகைக்கு அல்லது பற்றிஎரிகைக்கு உட்பட்டனவாகவுள்ள தொகையாகத் திண்ம வடிவத்திலான அபாயகரமான பண்டங்கள், தீ ஏற்படுவதற்கான சாத்தியத்தை மிகக்குறைவாக்குவதற்குப் போதிய முற்காப்புகள் எடுக்கப்பட்டிருந்தாலொழிய, ஏற்றிச்செல்லப்படுதலாகாது.

(4) அபாயகரமான ஆவிகளை வெளியேற்றுகின்ற தொகையாகத் திண்ம வடிவத்திலான அபாயகரமான பண்டங்கள், நன்கு காற்றோட்டமிடப்பட்ட சரக்கிடத்தில் அடுக்கிவைக்கப்படுதல் வேண்டும்.

18. (1) (அ) 1986, யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட ஓர் இரசாயனத் தாங்கற்கலன், சர்வதேசத் தொகையான இரசாயனப் பொருள் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன்

(ஆ) 1986, யூலை 1 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஓர் இரசாயனத் தாங்கற்கலன், தொகையாக அபாயகரமான இரசாயனப்பொருட்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களின் நிர்மாணத்துக்கும் சாதனமிடுகைக்குமான சட்டக்கோவையின் (தொகையான இரசாயனப் பொருள் சட்டக்கோவை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன்

ஏற்புடையற்பாலவாறு சமவாயத்தின் அத்தியாயம் 1 இன் 8, 9 மற்றும் 10 ஆம் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, அச்சட்டக்கோவையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஆய்வுசெய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இன் ஏற்பாடுகளைப்பின்பற்றி வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற இரசாயனத்தாங்கற்கலனொன்று, சமவாயத்தின் அத்தியாயம் 1 இன் 19 ஆம் ஒழுங்குவிதியில் நிலைநாட்டப்பட்ட கட்டுப்பாட்டுக்கமையவிருத்தல் (வேண்டும். இந்நோக்கத்துக்காக அத்தகைய சான்றிதழ், சமவாயத்தின் அத்தியாயம் 1 இன் 12 ஆம் அல்லது 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்டவொரு சான்றிதழாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் மற்றும் அதுதொடர்பான .கருவிகலத் தொகுதி இணைப்புக்கு உட்படுகின்ற ஏதேனும் இரசாயனத் தாங்கற்கலன், நிர்மாணத் திகதியைப் பொருட்படுத்தாது, ஆகக்குறைந்தது. கப்பலுக்கு முன்னர்

ஏற்புடையற்பாலனவாகவிருந்த தேவைப்பாடுகளுக்கேனும் தொடர்ந்து இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகையவொரு கப்பல், 1986, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்படின், விதியென்றமுறையில், அத்தகைய பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் அல்லது கருவிகலத்தொகுதி இணைப்புக்கு உட்படுமுன்னர் போன்று ஆகக்குறைந்தது அதே அளவுக்கேனும் அத்திகதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பலொன்றுக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். ஒரு பாரிய தன்மையினவான பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள் மற்றும் திரிபுகள் அத்துடன் அதுதொடர்பான கருவிகலத்தொகுதி இணைப்பு, பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமானதும் செயல்முறைக்குகந்ததுமெனக் கருதுகின்ற அளவுக்கு 1986, யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பலொன்றுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.

(4) ஓர் இரசாயனத் தாங்கற்கலனாக மாற்றப்படும் கப்பலொன்று, நிர்மாணத்திகதியைப் பொருட்படுத்தாது, அத்தகைய மாற்றம் தொடங்கிய திகதியன்று நிர்மாணிக்கப்பட்ட இரசாயனத் தாங்கற்கலனாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

19. (1) (அ) 1986, யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட வாயுக் கப்பலொன்று, சர்வதேச வாயுக் கப்பல் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன்

(ஆ) 1986, யூலை 1 ஆந் திகதியன்று முன்னரும் 1976, ஒற்றோபர் 31 ஆந் திகதிக்குப் பின்னரும் நிர்மாணிக்கப்பட்ட வாயுக் கப்பலொன்று, தொகையாகத் திரவமாக்கப்பட்ட வாயுக்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களின் நிர்மாணச் சாதனங்களுக்கான சட்டக்கோவையின் (வாயு ஏற்றிச்செல்லுதற் சட்டக்கோவை) தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன்

ஏற்புடையற்பாலவாறு சமவாயத்தின் அத்தியாயம் I இன் 8, 9 மற்றும் 10 ஆம் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, அச்சட்டக்கோவையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஆய்வுசெய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, சட்டக்கோவையின் தேவைப்பாடுகள் கட்டாயமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பந்தி (1) இன் ஏற்பாடுகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற வாயுக் கப்பலொன்று, சமவாயத்தின் அத்தியாயம் I இன் 19 ஆம் ஒழுங்குவிதியில் நிலைநாட்டப்பட்ட கட்டுப்பாட்டுக்கமையவிருத்தல் வேண்டும். இந்நோக்கத்துக்காக அத்தகைய சான்றிதழ், சமவாயத்தின் அத்தியாயம் I இன் 12 ஆம் அல்லது 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்டவொரு சான்றிதழாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் மற்றும் அதுதொடர்பான கருவிகலத் தொகுதி இணைப்புக்கு உட்படுகின்ற ஏதேனும் வாயுக் கப்பல், நிர்மாணத் தேதியைப் பொருட்படுத்தாது. ஆகக்குறைந்தது கப்பலுக்கு. முன்னர் ஏற்புடையற்பாலனவாகவிருந்த தேவைப்பாடுகளுக்கேனும் தொடர்ந்து இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகையவொரு கப்பல், 1986, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்படின், விதியென்றமுறையில், அத்தகைய பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் அல்லது கருவிகலத்தொகுதி இணைப்புக்கு உட்படுமுன்னர் போன்று, ஆகக்குறைந்தது அதே அளவுக்கேனும் அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பலொன்றுக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். ஒரு பாரிய தன்மையினவான பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள் மற்றும் திரிபுகள் அத்துடன் அதுதொடர்பான கருவிகலத்தொகுதி இணைப்பு பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமானதும் செயல்முறைக்குகந்ததுமெனக் கருதுகின்ற அளவுக்கு 1986, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பலொன்றுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.

(4) ஒரு வாயுக் கப்பலாக மாற்றப்படும் கப்பலொன்று, நிர்மாணத்தேதியைப் பொருட்படுத்தாது, அத்தகைய மாற்றம் தொடங்கிய தேதியன்று நிர்மாணிக்கப்பட்ட வாயுக் கப்பலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

20. (1) தொகையாக ஏற்றிச்செல்லப்படவேண்டிய எவையேனும் அபாயகரமான பண்டங்களின் அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளின் கப்பலேற்றுநர், பண்டங்களின் தன்மைபற்றியும் மற்றும் 60 பாகை செல்சியஸிலான அல்லது அதற்குக் குறைவான (மூடிய கிண்ணம்) பளிச்சீட்டுப்புள்ளியுடனான திரவப் பண்டங்களின் விடயத்தில், அப்பண்டங்களின் பளிச்சீட்டுப் புள்ளியைக் குறித்துரைக்கின்ற அறிவித்தல் கொடுத்து எழுத்திலான அறிவிப்பொன்றைத் தொழிற்படுத்துநருக்கு அல்லது கப்பற்றலைவருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அறிவிப்பானது, பண்டங்களின் சரியான தொழினுட்பப் பெயரையும் அவற்றின் ஐநாச இலக்கத்தையும் (ஏதேனுமிருப்பின்) மற்றும் தொகையாகத் திண்ம வடிவத்தில் ஏற்றிச்செல்லப்படும் அபாயகரமான பண்டங்களுக்காக, அப்பண்டங்கள் சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையில் நிரற்படுத்தப்பட்டவாறு எந்த வகுப்பாக்கத்தைச் சேர்ந்தனவோ அந்த வகுப்பாக்கத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) (அ) எழுத்திலான அறிவிப்பொன்றைத் தொழிற்படுத்துநருக்கு அல்லது கப்பற்றலைவருக்கு வழங்கத்தவறுகின்ற அல்லது

(ஆ) (அ) பொய்யானதென அவர் அறிந்துள்ள அறிவிப்பொன்றை வழங்குகின்ற அல்லது குறிப்பிட்டவொரு விபரத்தில் பொய்யானதாகவுள்ள அறிவிப்பொன்றைக் கவலையீனமாக வழங்குகின்ற,

எவையேனும் அபாயகரமான பண்டங்களை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளைத் தொகையாகக் கப்பலேற்றுபவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) அயாயகரமான பண்டங்களை அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளைத் தொகையாக ஏற்றிச்செல்கின்ற கப்பலொன்றின் கப்பற்றலைவர், அது எந்தக் கடற் பயணத்தில் தற்போது ஈடுபட்டுள்ளதோ அந்தக் கடற் பயணத்துக்காகப் பின்வருவனவற்றைச் செய்கின்ற குறிப்பிட்ட நிரல், சரக்குப் பட்டியல் அல்லது அடுக்குகைத் திட்டம் கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்:-

(அ) கப்பலில் ஏற்றிச்செல்லப்பட்ட அபாயகரமான பண்டங்களின் சரியான தொழினுட்பப் பெயர், அவற்றின் திரண்மம் அல்லது அளவு மற்றும் தொகையான சரக்குகள் சட்டக்கோவையின் பின்னிணைப்பு ஆ வில் அபாயகரமான பண்டங்கள் காட்டப்படுகின்றவிடத்து, சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவைக்கிணங்கவுள்ள வகுப்பாக்கம் என்பனவுட்பட, அது தற்போது ஈடுபட்டுள்ள கடற்பயணத்துக்காக அதில் ஏற்றிச்சொல்லப்படும் அப்பண்டங்கள் அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகள் பற்றியனவும் கப்பலேற்றுநரினால் சமர்ப்பிக்கப்பட்ட கப்பலேற்றல் ஆவணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவுமான விபரங்களைத் தருகின்றதும் அத்துடன்

(ஆ) கப்பலில் பண்டங்கள் அடுக்கிவைக்கப்படும் இடத்தின் விபரங்களைக் காட்டுகின்றதும்.

(4) கப்பற்றலைவர், அபாயகரமான பண்டங்கள் அல்லது கடல்சார் தீழ்ப்பாக்கிகளை ஏற்றிச்செல்வதற்காகச் சர்வதேசக் கடலோரத் தொகையான திண்மச் சரக்குகள் சட்டக்கோவையினால், தொகையான இரசாயனப் பொருள் அல்லது சர்வதேசத் தொகையான இரசாயனப்பொருள் சட்டக்கோவைகளினால் அல்லது சர்வதேச வாயுக் கப்பல் அல்லது வாயுக் கப்பல் சட்டக்கோவைகளினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, எவையேனும் மேலதிக விசேட ஆவணங்களையும் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

(5) கப்பலில் ஏற்றிச்செல்வதற்காக அத்தகைய பண்டங்களை ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏதேனும் அத்தகைய நிரல், சரக்குப்பட்டியல் அல்லது அடுக்குகைத்திட்டம் மற்றும் எவையேனும் மேலதிக விசேட ஆவணங்கள், பண்டங்கள் கப்பலிலிருந்து இறக்கப்படும்வரை குறிப்பீட்டுக்காக அல்லது சோதனைக்காகக் கப்பலில் கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## கப்பல்களில் பொதியிடப்பட்ட பிறங்கல் அணுசக்தி எரிபொருள், பொலத்தினியம் மற்றும் உயர்மட்டக் கதிரியக்கமுடைய கழிவுப்பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான விசேட தேவைப்பாடுகள்

21. 1) சர்வதேச அணுசக்தி எரிபொருள் சரக்கை ஏற்றிச்செல்கின்ற கப்பலொன்று, சமவாயத்தின் வேறெவையேனும் ஏற்புடையனவான தேவைப்பாடுகளுடன்சேர்த்து சர்வதேச அணுசக்தி எரிபொருள் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டக்கோவையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஆய்வுசெய்யப்படுதலும் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இன் ஏற்பாடுகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கப்பல், சமவாயத்தின் அத்தியாயம் 1 இன் 19 ஆம் ஒழுங்குவிதியிலும் சமவாயத்தின் அத்தியாயம் XI - I இன் 4 ஆம் ஒழுங்குவிதியிலும் நிலைநாட்டப்பட்ட கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாதல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, அத்தகைய சான்றிதழ், சமவாயத்தின் அத்தியாயம் 1 இன் 12 ஆம் அல்லது 13 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

## பாகம் V

### அபாயகரமான பண்டங்களை உட்படுத்துகின்ற சம்பவங்களை அறிக்கையிடுதல்

22. (1) தொகையாகத் திண்ம வடிவத்திலான அல்லது பொதியிடப்பட்ட வடிவத்திலான அபாயகரமான பண்டங்களைக் கடலினுள் இழப்பதனை அல்லது இழக்கக்கூடிய சாத்தியமுள்ளனை உட்படுத்துகின்ற சம்பவமொன்று இடம்பெறும் போது, கப்பற்றலைவர் அல்லது கப்பலுக்குப் பொறுப்பாகவுள்ள வேறு ஆள், மிகக்கிட்டிய கரையோர அரசுக்குத் தாமதமின்றியும் இயன்றளவுவரை முழுமையாகவும் அத்தகைய சம்பவத்தின் விபரங்களை அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையானது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புத் தீர்மானம் A.851 (20) இல் விவரிக்கப்பட்ட பொது நெறிகளினதும் வழிகாட்டுநெறிகளினதும் அடிப்படையில் வரையப்படுதல் வேண்டும்.

*(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய சம்பவம் இலங்கை நீர்ப்பரப்புகளில் இடம்பெற்றால், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.*

*(3) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பல் கைவிடப்படும் பட்சத்தில், அல்லது அத்தகைய கப்பலிலிருந்தான. அறிக்கை பூர்த்தியற்றதாக அல்லது பெறப்படத்தக்கதல்லாததாக இருக்கும் பட்சத்தில், கம்பெனி, சமவாயத்தின் அத்தியாயம்* IX *இன் ஒழுங்குவிதி 1.2 இல் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, இயன்றளவுவரை முழுமையாக இவ்வொழுங்குவிதியினால் கப்பற்றலைவரின்மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளை ஏற்கவேண்டும்.*

## பாகம் VI

## பொது ஏற்பாடுகள்

*23. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு! ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதுப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.*

*24. சமவாயத்தின் அத்தியாயம்* VII *இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*25. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.*

*26. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாதுவிடுகின்ற அல்லது இணங்கியொழுகுவதற்கு அசட்டையாகவிருக்கின்ற அல்லது நியாயமான காரணமின்றி அல்லது. இவ்வேற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.*

*27. இவ்வொழுங்குவிதிகளில் -*

*சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவை என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, தீர்மானம்* MSC.*122(75), இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் (சகஅப) சட்டக்கோவை என்று பொருளாகும்*

*சகஒ என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;*

*"சகதொதிச சட்டக்கோவை" என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, தீர்மானம்* MSC.*268(85) இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடலோர தொகையான திண்மச் சரக்குகள் (சகதொதிச) சட்டக்கோவை என்று பொருளாகும்;*

*"சர்வதேசத் தொகையான இரசாயனப்பொருள் சட்டக்கோவை (சதொஇ சட்டக்கோவை)" என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, தீர்மானம்* MSC.*4(48) இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையாக அபாயகரமான இரசாயனப்பொருட்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றுக்குச் சாதனமிடுதலுக்கான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;*

*"சர்வதேச அணுசக்தி உரிபொருள் சரக்கு" என்பது, சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையின் வகுப்பு 7 லுக்கிணங்கச் சரக்காக ஏற்றிச்செல்லப்படும் பொதியிடப்பட்ட பிறங்கல் அணுசக்தி எரிபொருள், பொலத்தினியம் மற்றும் உயர்மட்டக் கதிரியக்கமுடைய கழிவுபொருட்கள் என்று பொருளாகும்;*

*"சர்வதேச வாயுக் கப்பல் சட்டக்கோவை (சவாக சட்டக்கோவை)"* என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, தீர்மானம் MSC.*5(48)* இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையாகத் திரவமாக்கப்பட்ட வாயுக்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றுக்குச் சாதனமிடுதலுக்கான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

*"சர்வதேச அணுசக்தி எரிபொருள் சட்டக்கோவை"* என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, தீர்மானம் MSC.*88(71)* இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொதியிடப்பட்ட பிறங்கல் அணுசக்தி எரிபொருள், பொலத்தினியம் மற்றும் உயர்மட்டக் கதிரியக்கமுடைய கழிவுப்பொருட்களைக் கப்பலில் காப்பாக ஏற்றிச்செல்லுதலுக்கான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்; அத்துடன்

*"ஐக்கிய நாடுகள் சபை இலக்கம்"* என்பது, அபாயகரமான பண்டங்களை இடம்பெயர்த்தல்பற்றிய மாதிரி ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்டவாறு, அபாயகரமான பண்டங்களை இடம்பெயர்ப்பதற்கும் களஞ்சியப்படுத்துவதற்குமான ஐக்கிய நாடுகள் சபை முறைமையின்கீழான பொருளுக்கு அல்லது பதார்த்தத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட நான்கெண் அடையாளங்காண் இலக்கம் என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.